**2025–ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 19–ஆம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகர மன்ற அவசர கூட்டத்தின் நடவடிக்கைகள்.**

**முன்னிலை:–** திரு.பி.ஏஜாஸ் அஹமத் அவர்கள்
நகர மன்றத்தலைவர்,
ஆம்பூர் நகர மன்றம்

1. ஆம்பூர் வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.ஆ1/1207/2025, நாள்:08/07/2025–ல் ஆம்பூர் நகரம், மேல்கிருஷ்ணாபுரம் வார்டு:D, பிளாக்:26, நகரளவு எண்:25–ல் பரப்பளவு 0.4605.0 சதுர மீட்டர் அரசு புறம்போக்கு, உமர் தெரு என வகைபாடு கொண்ட இடத்தில் ஆம்பூர் கிளை நூலகம் அமைக்க நூலகத்துறைக்கு நில மாற்றம் செய்திட மாவட்ட ஆட்சியர், திருப்பத்தூர் அவர்களுக்கு நில மாற்ற முன் மொழிவுகள் அனுப்பிவைக்கும் பொருட்டு மேற்படி இடத்தில் கிளை நூலகம் அமைக்க நகரமன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

   <u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்

   ந.க.எண்: 1289/2025/எப்1

   **தீர்மான எண். 124 :– அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

2. ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் வெளிகொணர்வு முகமை மூலம் பணிகளை மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ளவும்,_ஆண்டு ஒன்றுக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ664.55 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க. எண். 33553/2022/EA1 நாள் : 20.06.2025 அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், 28.07.2025ஆம் தேதியன்று இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதியினை ஆய்வு செய்யப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை விவர ஒப்பந்தப்புள்ளிகளை (PRICE BID) 31.07.2025–ஆம் தேதி அன்று திறப்பு செய்யப்பட்டது. தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ (டன் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | M/s. Mayura Environ Tech pvt ltd,<br>No 129/B2 Odukathur Road,<br>Madanur, Thirupathur Dt | 4030/– |
| 2. | M/s. Our Land Engineering,<br>No.25,AtandraTowers, ,<br>T. Nagar, Chennai | 4150/– |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மேற்குறிப்பிட்டுள்ள குறிப்பிட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் வெளிகொணர்வு முகமை மூலம் மேற்கொள்ள மதிப்பீட்டு தொகையினை விட குறைவான ஒப்பந்த விலை விகிதம் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் M/s. Mayura Environ Tech pvt ltd, Madanur என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

2. மேற்படி பணிக்காகும் செலவினத்தை வருவாய் நிதியில் / 15வது நிதிக்குழு மான்யம் வரையறுக்கப்பட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.
3. மேற்கண்ட திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தை கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.1044/இ1/2025**

**தீர்மான எண். 125 :– அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

3. ஆம்பூர் நகரம், வார்டு:A, பிளாக்:17, நகரளவு எண்:31–ல் பரப்பளவு 0.86 ஏக்கர் (அ) 3512.50 சதுர மீட்டர் கொண்ட தனது நிலத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பத்தூர் மாவட்டம் அவர்களால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதற்கு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குமாறு திரு.A.K.நாகேஸ்வரன் என்பவர் கோரியுள்ளார். மேற்படி நிலத்தில் 19 குடியிருப்பு மனைகள் கொண்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு திருப்பத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களால் SWP/DTCP/TIRUPATHUR/LAYOUT NO : 16/2025, நாள்: 16/03/2025–ல் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் தானபத்திரம் எண் : 1640/2025, நாள் : 05/03/2025 அன்று ஆம்பூர் நகராட்சி ஆணையாளர் பெயரில் ஒப்படைத்துள்ளார். மேற்படி மனைப்பிரிவில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்: 12843/2022/டிபி2, நாள்: 20/10/2023 மற்றும் அரசாணை எண்:181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:09/12/2020–ன்படி மனுதாரரால் அடிப்படை வசதிகளான சாலை வசதி, கால்வாய் வசதி மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது. மின் கம்பங்கள் அமைக்க கம்பத்திற்கு ரூ.20,000/– வீதம் 4 கம்பங்களுக்கு ரூ.80,000/– செ.எண்:023/AB1/1/25–26/0005638, நாள்: 25/07/2025–ல் செலுத்தியுள்ளார்.

**எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு செலுத்த வேண்டிய.**

| | | |
|---|---|---|
| 1 | மனைப்பிரிவு கூராய்வு கட்டணம் | 10000 |
| 2 | மனை உட்பிரிவு கட்டணம் | 19000 |
| 3 | மனைப்பிரிவு அனமதி கட்டணம் | 10000 |
| 4 | அபிவிருத்தி கட்டணம் | 8790 |
| 5 | உட்கட்டமைப்பு (ம) வசதிக்கான 5 ஆண்டு பராமரிப்பு வைப்புத்தொகை | 86000 |

ஆகிய கட்டணங்கள் செலுத்திய பிறகு மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 599/2025/எப்1

**தீர்மான எண். 126 :– அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

4. இந்நகரமன்ற தீர்மான எண்.118 நாள்.29.08.2024–ல் இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு மற்றும் சிக்கன் குன்னியா நோய்களை பரப்பக்கூடிய கொசுக்களை கட்டுப்படுத்தவும், கொசு புழுக்களை வீடுவீடாக சென்று அழிக்கவும், இந்நகராட்சியில் 80 எண்ணிக்கை DBC பணியாளர்களை கொண்டு 36 வார்டு பகுதிகளிலும் உள்ள தெருக்களில் சென்று 6 Day Block முறையில் 1 DBC பணியளார் 6

நாட்களுக்கு 300 வீடுகள் பார்க்கும் பணிக்கு ரூ.12.00 லட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு முறையே 27.12.2024–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. Mayura ManpowerSolutions (p) Ltd., என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டதினை இந்நகர மன்ற தீர்மான எண்: 104 நாள்.29.05.2025–ல் அங்கீகரிக்கப்பட்டது.

மேற்படி பணிக்கு வழங்கப்பட்ட பணி உத்திரவின்படி வரும் 30.06.2025–டன் முடிவடைவதால் ஒப்பந்த அடிப்படையில் DBC பணியாளர்களை நாள் ஒன்றுக்கு 80 பணியாட்களை சப்ளை செய்யும் பணியின் ஒப்பந்ததார் M/s. Mayura ManpowerSolutions (p) Ltd., என்ற நிறுவனம் மூலம் மேற்கண்ட பணியினை அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மேற்கொள்வதாக இசைவு கடிதம் அளித்துள்ளார்.

எனவே பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு மற்றும் சிக்கன் குன்னியா நோய்களை பரப்பக்கூடிய கொசுக்களை கட்டுப்படுத்தும் பணிக்கு 80 எண்ணிக்கை DBC பணியாளர்களை சப்ளை செய்யும் பணியினை அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 01.07.2025 முதல் 31.07.2025 வரை சப்ளை செய்யும் பணிக்கு M/s. Mayura Manpower Solutions (p) Ltd., என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு ஆணை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : –**

1. 01.07.2025 முதல் 31.07.2025 வரை DBC பணியாளர்களை சப்ளை செய்யும் பணிக்கு 01.07.2025 முதல் 31.07.2025 வரை பணி நீட்டிப்பு ஆணை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.80/2023/எச்1)

**தீர்மான எண். 127 :– அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

5. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் உள்ள வீடுகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் மற்றும் நச்சுத்தொட்டிகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் அகற்றுதல் சம்மந்தமாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண்.27152/2021/SBM2, நாள். 23.05.2025ல் இணைத்து வரப்பெற்ற Septage Management By–Law (AMENDMENT) 2024 தூய்மை இந்தியா திட்டம் (ந) 2.0 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022–ன் கீழ் கசடுகழிவு மேலாண்மைத் துணை விதிகள் (திருத்தம்) 2024 என்னும் நகர சுகாதாரத்திற்காக இந்நகராட்சிக்கு என்று துணை விதிகள் உருவாக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதற்கிணங்க துணை விதியினை பொது மக்கள் அறியும் வகையில் இரண்டு தினச் செய்திதாளில் பிரசுரம் செய்து திருப்பத்தூர் மாவட்ட அரசிதழில் வெளியிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி தோராயச் செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்தள்ளவாறு

இந்நகராட்சிக்கு என்று கசடுகழிவு மேலாண்மைத் துணை விதிகள் (திருத்தம்) 2024 என்று துணை விதியினை தனியாக இயற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி தினச்செய்தி தாளில் விளம்பரம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் ஒப்புதல் பெற்று திருப்பத்தூர் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.80/2023/எச்1

**தீர்மான எண். 128 :– அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

6. இந்நகரமன்ற தீர்மான எண்.118 நாள்.29.08.2024–ல் இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு மற்றும் சிக்கன் குன்னியா நோய்களை பரப்பக்கூடிய கொசுக்களை கட்டுப்படுத்தவும், கொசு புழுக்களை வீடுவீடாக சென்று அழிக்கவும், இந்நகராட்சியில் 80 எண்ணிக்கை DBC பணியாளர்களை கொண்டு 36 வார்டு பகுதிகளிலும் உள்ள தெருக்களில் சென்று 6 Day Block முறையில் 1 DBC பணியளார் 6 நாட்களுக்கு 300 வீடுகள் பார்க்கும் பணிக்கு ரூ.12.00 லட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு முறையே 27.12.2024–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. Mayura ManpowerSolutions (p) Ltd., என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டதினை இந்நகர மன்ற தீர்மான எண்: 104 நாள்.29.05.2025–ல் அங்கீகரிக்கப்பட்டது.

மேற்படி பணிக்கு வழங்கப்பட்ட பணி உத்திரவின்படி வரும் 31.07.2025–டன் முடிவடைவதால் ஒப்பந்த அடிப்படையில் DBC பணியாளர்களை நாள் ஒன்றுக்கு 80 பணியாட்களை சப்ளை செய்யும் பணியின் ஒப்பந்ததார் M/s. Mayura ManpowerSolutions (p) Ltd., என்ற நிறுவனம் மூலம் மேற்கண்ட பணியினை அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மேற்கொள்வதாக இசைவு கடிதம் அளித்துள்ளார்.

எனவே பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு மற்றும் சிக்கன் குன்னியா நோய்களை பரப்பக்கூடிய கொசுக்களை கட்டுப்படுத்தும் பணிக்கு 80 எண்ணிக்கை DBC பணியாளர்களை சப்ளை செய்யும் பணியினை அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 01.08.2025 முதல் 30.09.2025 வரை சப்ளை செய்யும் பணிக்கு M/s. Mayura ManpowerSolutions (p) Ltd., என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு ஆணை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவல குறப்பு : –**

1. 01.08.2025 முதல் 30.09.2025 வரை DBC பணியாளர்களை சப்ளை செய்யும் பணிக்கு 01.08.2025 முதல் 30.09.2025 வரை பணி நீட்டிப்பு ஆணை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.80/2023/எச்1)

**தீர்மான எண். 129 :– அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

ஓம்/—பி.ஏஜாஸ் அஹமத்
தலைவர்
நகர மன்றம், ஆம்பூர்

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி